கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் இது! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது!

ஒன்றிய பட்ஜெட்டில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்!

மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் பேச்சு!

புதுடெல்லி, பிப்.11

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த பட்ஜெட் கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் என்றும், வேலைவாய்ப்பு திண்டாட்டத்தை போக்க இந்த பட்ஜெட்டில் திட்டங்கள் எதுவுமில்லை என்றும் மக்களவையில் ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கழக மக்களவை குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டு களை எடுத்துக் கூறி உரையாற்றினார்.

மக்களவையில் தயாநிதி மாறன் பேசியதாவது:-

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3வது பதவிக்காலத்தின் முதல் முழு ஆண்டு பட்ஜெட் மீண்டும் சாமானியர்களை விட கார்ப்பரேட்டுகளுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் 8 சதவீத வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதனால் இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்க கூடிய அனைத்தையும் நீங்கள் பெற்றிருந்தீர்கள். அதற்குப் பதிலாக எங்களுக்குக் கிடைத்தது, வெற்று வாக்குறுதிகள் மற்றும் பக்கச்சார்பான வரவு செலவுத் திட்டங்கள்தான்.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 87.35 ஆக சரிந்துள்ளது. 2025 ஜனவரியில் மட்டும் ரூ.70 ஆயிரம் கோடி அன்னிய முதலீடுகள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளன. இது ஒரு மாதக் கதைதான். எதிர்க்கட்சிகள் இதைப்பற்றி எல்லாம் பேசும் போது நிதியமைச்சர் அவையில் இல்லாமல் போய்விடுகிறார். அப்படியானால், அவர் பதிலளிக்கும்போது நாங்களும் புறக்கணிப்போம்.

டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு!

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ரூ.68ஆக இருந்த போது, இன்றைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மன்மோகன்சிங் அரசை ராஜினாமா செய்யக் கோரி பேட்டியளித்தார். இப்போது 87.5 ஆக உள்ளது. இப்போது நீங்கள் ராஜினாமா செய்வீர்களா அல்லது நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்க வேண்டுமா?

வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்க இந்த பட்ஜெட்டில் எதுவுமில்லை. வேலைவாய்ப்பை உருவாக்குவது காலத்தின் தேவை, ஆனால் 2.5 கோடி பேர் வேலையில்லாமல் இருந்தாலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பெரிய முயற்சிகள் எதுவும் இல்லை. இந்தியாவின் ஏற்றுமதியில் 45% வழங்கும், 7.5 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் சிறு குறு தொழில் நிறுவனங்கள் இந்த பட்ஜெட்டில் இருந்து வரி விலக்கு அல்லது ஆதரவைப் பெறவில்லை. ஆண்டுதோறும் 6070 லட்சம் இளைஞர்கள் வேலைதேடும் சந்தையில் நுழைகிறார்கள், ஆனால் அவர்களின் வேலைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை. அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் விற்கப்பட்டுவிட்டன அல்லது விற்கப்படும் நிலையில் உள்ளன. முன்னதாக அவற்றை எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க அவற்றைப் பயன்படுத்தினோம். இப்போது அதுவும் உங்கள் கையில் இல்லை,

எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க அம்பானிகளிடமும், அதானிகளிடமும், டாடாக்களிடமும் நாங்கள் கெஞ்ச வேண்டும்.

பெட்ரோலில் பெரும் லாபம்!

பெட்ரோல் விலையில் நீங்கள் பெரும் லாபம் ஈட்டியுள்ளீர்கள். கொரோனா காலத்தில் கூட உலகம் முழுவதும், சந்தை விலை குறைவாக இருந்தபோது எரிபொருளின் மீதான வரிகள் மற்றும் கலால் வரிகளின் மூலம் அரசாங்கம் அதிக லாபம் ஈட்டியுள்ளது. 2019-20ல் உங்கள் கருவூலத்திற்கு பெட்ரோலியத் துறையின் மொத்த பங்களிப்பு ரூ.5,55,370 கோடி, 2020-21 ரூ.6,72,718 கோடி, 2021-22ல் ரூ.7,74,425 கோடி, 2022-23ல் ரூ.7,48,718 கோடி, 2023-24ல் ரூ.7,51,155.9 கோடி, 2024-25-ல் கடந்த 6 மாதங்களில் மட்டும் ரூ.3,39,185.5 கோடி.

உக்ரைன் போர் தொடங்கிய போது, ரஷ்யாவின் சந்தை விலையான 120 டாலருக்கு பதில் 60 டாலருக்கு எரிபொருளை விற்றுக்கொண்டிருந்தபோது, நீங்கள் ரிலையன்ஸ் நிறுவனங்களை எதிர்பாராத லாபத்தைப் பெற அனுமதித்தீர்கள், உங்கள் நண்பர்கள் அனைவரையும் லாபம் ஈட்ட அனுமதித்தீர்கள். ஆனால் 50% குறைப்பு பலனை நீங்கள் சாமானியர்களுக்கு வழங்கியிருக்கலாம். இந்த பட்ஜெட் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. இது மக்கள் விரோத, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானாவுக்கு எதிரான மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் 98% மக்கள் தொகைக்கு எதிரானது. எனவே நிதியமைச்சர் இன்னும் நேர்மறையாக இருக்க வேண்டும். ஒட்டுமொத்த இந்தியாவுக்கான பட்ஜெட் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

எத்தனை நதியை இணைத்தீர்கள்?

2019ல் ஜல் சக்தி என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கியது. நதிகளை இணைப்பதற்காகவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக மறுபெயரிடுகிறீர்கள் என்று சொன்னீர்கள். வருடங்கள் ஆகிவிட்டது. எத்தனை நதிகளை இணைத்தீர்கள், எத்தனை வெள்ளத்தை தடுத்தீர்கள்?

பீகாருக்கு அதிக திட்டங்கள்!

பீகார் தேர்தலை முன்னிட்டு அங்கு அதிக திட்டங்களை அறிவித்துள்ளனர். ஆனால் தென் மாநிலங்களை நியாயமற்ற முறையில் நடத்துகிறார்கள். தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால், அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் போனஸ் அல்லது மாயாஜால அறிவிப்பை பார்க்கலாம். கன்னியாகுமரி திருவனந்தபுரம் தொழில் வழித்தடம் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பெங்களூரு, சென்னை, ஐதராபாத் போன்ற தகவல் தொழில்நுட்ப மையங்கள் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்தாலும், அவர்களுக்கு எந்த சலுகையும் இல்லை.

தமிழகத்திற்கு எதிரான பாகுபாடு கடந்த வாரத்தில், தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் ரூ.2,000 கோடியை மத்திய அரசு எடுத்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கு திருப்பியளித்துள்ளது. மாணவர்களைத் தண்டிக்கும் ஒன்றிய அரசு பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறோம். எங்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். எங்கள் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வோம். எங்கள் சொந்த நிதியில் அவர்களுக்கு ஆதரவளிப்போம். இந்தியாவிலேயே திராவிட மாடல் அடிப்படையில் வெற்றி பெற்ற மாநிலம் தமிழ்நாடு' என்றார்.

தமிழ்நாடு முதல்வராக முயன்றது போல் பெரிய பதவிக்கு முயற்சிக்கிறார் நிர்மலா

இன்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இவ்வளவு உயரங்களை எட்டியிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் பெண்கள் கல்வி கற்கும் பெரியார் என்ற ஒரு மனிதனால்தான். அதை அவர் மறக்கவே கூடாது. 2017 ஆம் ஆண்டு, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அவர் தமிழ்நாட்டில் இருந்தார். முதல்வராகலாம் என்று நினைத்து, அந்த பதவிக்காக ஏங்கிக் கொண்டிருந்ததால், இந்த ஆண்டு நீட் வராது, இந்த ஆண்டு தமிழகத்துக்கு நீட் விலக்கு என்று கூறினார்.

அனைத்து மாணவர்களும் நம்பினர். ஆனால் நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் அவர் சொன்னது நிறைவேறாது என்று எங்களுக்குத் தெரியும். எங்கள் மக்களை கவர, அவர் முயற்சித்தார். அதேபோன்று அவர் இப்போது ஒரு பெரிய பதவிக்காக முயற்சி செய்து இருக்கிறார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் நாங்கள் அவரை வாழ்த்துகிறோம்.

இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடி. 2023-24ல் 8 கோடி பேர் (5.7%) மட்டுமே வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்துள்ளனர். இவர்கள்தான் நேரடி வரி செலுத்துபவர்கள். அவர்களில் 4.15 கோடி பேர் மாதம் ரூ.50,000க்கும் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள். 1.5 கோடி பேர் மாதத்திற்கு ரூ.1 லட்சத்துக்கு மேல் சம்பாதிப்பதால், வரிச் சலுகைக்கு அவர்கள் தகுதி பெறவில்லை. இதனால் பயன் பெறும் 2.5 கோடி பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர். இது மக்கள் தொகையில் 1.75% மட்டுமே. இந்த நடவடிக்கை டெல்லியில் பாஜ வாக்குகளைப் பெற உதவியது. இது ஒரு குறுகிய கால இனிப்பு. நிலையான தீர்வு அல்ல. ஆனால் வளர்ச்சி தேக்கமடைந்தால், விலைவாசி உயர்ந்துள்ளதால் அவர்களுக்கும் இதில் எந்த பலனும் இல்லை. எஞ்சிய 98.25% இந்தியர்களுக்கு 12 லட்சம் வருமான வரிச் சலுகையால் எந்த லாபமும் இல்லை. இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் மறைமுக வரிகள் மூலம் அதிகளவில் செலுத்துகிறார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் உரையாற்றினார்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (10.02.2025) ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பா. பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது) செல்வி.ர. அனாமிகா மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கிட

கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்கள்!

மாவட்ட ஆட்சியர் தகவல்!

காஞ்சிபுரம், பிப். 11-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் அரசின் திட்டங்களை பெறுவதற்கு அடையாள எண்கள் வழங்கப்பட உள்ளதாகவும். இதற்காக கிராம பஞ்சாயத்துக்கள் தோறும் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளதாகவும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கலைசெல்வி மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விவசாயிகள் அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு நில விவரங்களை சரிபார்த்து தனிப்பட்ட விவசாயிகள் அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. மின்னணு முறையில் அனைத்து விவசாயிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆதார் எண் போன்று விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் அட்டை வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் ஒப்புதல் பெற்ற பின்னரே அவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அடையாள எண் அட்டை வழங்கப்பட உள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் அனைத்து அரசு திட்ட உதவிகளும் விவசாயிகளின் தரவுகளத்தின் அடிப்படையிலயே வழங்கப்படும்.

நில விவரங்களை இணைப்பதன் மூலம் அனைத்து துறை திட்டங்களையும் எளிதில் பெறலாம். ஒவ்வொரு முறையும் விண்ணப்பிக்கும் போது ஆவணங்களை சரிபார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அரசு திட்டங்கள் சரியாக பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த முடியும். விவசாயிகள் நேரடியாக வலைதளத்தில் பதிவு செய்தால் முன்னுரிமை அடிப்படையில் அரசின் நலத்திட்டங்கள் பெற்றுக்கொள்ள முடியும். பிரதமரின் கவுரவ நிதிதிட்டம் மற்றும் பயிர் காப்பீடு போன்ற இதர மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் அனைத்தும் இத்தரவுகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட உள்ளது.

மாவட்டத்தில் தற்போது பிரதம மந்திரியின் கவுரவ நிதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விவசாயிகள் இப்பதிவு திட்டத்தின் மூலம் தரவுகளை சரிபார்த்து அவரவர்களுக்கு அடையாள எண் அட்டை வழங்கப்பட உள்ளது. இப்பணி மேற்கொள்ள சிறப்பு முகாம்கள் இம்மாவட்டத்திலுள்ள 274 கிராம பஞ்சாயத்து அலுவலகங்களில் 09.02.2025 முதல் 14.02.2025 வரை நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு கிராமத்துக்கும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள், அட்மா திட்ட பணியாளர்கள், பயிர் அறுவடை பரிசோதனையாளர்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோர் வருகை தந்து தனிப்பட்ட அடையாள எண் அட்டை வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே அனைத்து விவசாயிகளும் தங்களுடைய பட்டா, சிட்டா, ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட செல்போன் எண் ஆகியவற்றை கொண்டு வந்து இம்முகாமில் பதிவு செய்து பயனடையலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

புழல் பகுதியில் மாஸ்டர் நிர்மல் குமார் ஜெயராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசினை புழல் 24 வது வட்ட செயலாளர் கே.பி. சுந்தரேசன், பகுதி கழகப் பிரதிநிதி பி.எஸ்.என்.எல். நாகராஜ் வழக்கறிஞர் கே.பி.எஸ் அன்பரசு ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர். உடன் செயற்குழு உறுப்பினர் சுரேஷ் கபாலி, இளைஞர் அணி கிச்சா (எ) கிருஷ்ணமூர்த்தி, லட்சுமணன், கழக முன்னோடி சி.பி.ஐ. ஜெகநாதன் ஆகியோர் உள்ளனர்.

சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்ற கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழாவில் நேற்று (10.2.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் நல ஆணையர் சி.அ.ராமன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் எஸ். ஆனந்த், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு காவல் துறை தலைவர் திருமதி கயல்விழி, தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு துணை செயலாளர் /சார்பு நீதிபதி திருமதி ச.வேங்கட லட்சுமி, சென்னை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர்/முதுநிலை சார்பு நீதிபதி எஸ் செந்தில் பாபு, காவல்துறை துணை ஆணையர் திருமதி ஜி வனிதா, கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள், மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டினை 2030–க்குள்

கொத்தடிமைத் தொழிலாளர் முறை இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும்!

அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவுறுத்தல்!

சென்னை, பிப்.11-

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழித்திடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் சென்னை, தியாகராயர் நகரில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழியினை அமைச்சர் சி.வெ. கணேசன் முன்னிலையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசியதாவது:

தொழிலாளர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி கொத்தடிமை தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற சீரிய முயற்சியுடன், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டால், 24 மணி நேரத்திற்குள் அவர்கள் மீட்கப்பட்டு, உடனடி நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

அவ்வகையில், இவ்வரசு பொறுப்பேற்றது முதல், 570 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, உடனடி நிவாரணத் தொகையாக 1 கோடியே 89 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்கு தண்டனையில் முடிவுற்ற பின்னர், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களில் ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.1,00 இலட்சம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.2.00 இலட்சம் மற்றும் இதர சிறப்புப் பிரிவு தொழிலாளர்களுக்கு ரூ.3.00 இலட்சம் இறுதி நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும் மீட்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், பல்வேறு துறைகளின் வாயிலாக மறுவாழ்வு நடவடிக்கைகளும், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் குறு நாடகம் நடைபெற்றது. 2023-24ம் ஆண்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாக பணிபுரிந்த சென்னை, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி. ஜெயலட்சுமி, சேலம் மாவட்ட தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதர துணை இயக்குநர் திருமதி. இலக்கியா, மற்றும் வருவாய் கோட்டாச்சியர் திருமதி.க்யூரி மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்வம் ஆகியோருக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ. வீரராக வராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், காவல்துறை தலைவர் திருமதி கயல்விழி, தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழு துணை செயலாளர் / நீதிபதி திருமதி ச. வேங்கடலட்சுமி, சென்னை, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு செயலாளர் / முதுநிலை சார்பு நீதிபதி செந்தில் பாபு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செ.ஆனந்த், காவல் துறை துணை ஆணையர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு) திருமதி ஜி.வனிதா கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், தொழிலாளர் இணை ஆணையர்கள், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய பிற துறை அலுவலர்கள், தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.